

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் மகன் விஜயபிரபாகரன் மற்றும் துணை செயலாளர்கள் எல்.கே. சுதீஷ் மற்றும் பி.பார்த்தசாரதி ஆகியோர் சந்தித்து, 28.12.2024 அன்று நடைபெறவுள்ள தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள்.



சென்னை, கோட்டூர்புரம், நேற்று (23.12.2024) அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறை சார்பில் சிங்கப்பூர் நாட்டிற்கு 5 நாள் பயணமாக கல்விச் சுற்றுலா செல்லும் 42 மாணவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது பள்ளிக் கல்வி துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் - மாதவரம் வடக்கு பகுதி சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் - 1047 மகளிருக்கு நல உதவிகள்!

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் – ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றி நல உதவிகள் வழங்கினார்.

மாதவரம், டிச. 24 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா புழல் அடுத்த காவாங்கரயில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் புழல் காவாங்கரை பிள்ளையார் கோயில் தெருவில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1047 மகளிருக்கு சேலைகள் வழங்கும் விழாவும் நடைபெற்றது.

23 அ வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன், 23வது வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன்,பகுதி கழக நிர்வாகிகள் வி. திராவிடவீரன், கவுன்சிலர் க. காசிநாதன், பா. சந்திரன், ஜிம் கே. ராஜா,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஹெச். பீர்முகமது, அம்மமூர்த்தி, ஆர். சுதா, எஸ். சுதா, ஜெ. யுவராணி, வட்டக் கழக நிர்வாகிகள் மு. உசேன் மொய்தீன, பி. சுதாகர், பொ. அறிவழகன், பெ. முத்துகிருஷ்ணன், அ .அப்துல்சமது, வி. ஹரி, து.பார்பன், ஜி. பார்த்திபன், மு. விக்னேஸ்வரன், டி. ராஜாராம், மேக்சீலா உதய குமார்,சொ. சரவணன், டி. நெல்சன் ராஜ், க. சிவக்குமார், க. ந. க. சைமன், வே. ரவி, எஸ். முத்துவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமை தாங்கினார்.கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர். எஸ். பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கழக அரசின் சாதனைகள் குறித்து என் உயிரினும் மேலான மாநில இளைஞரணி பேச்சு போட்டியில் முதல் பரிசு பெற்ற ம. மோகநிதி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஆலந்தூர் ஆர். எஸ். பாரதி அவர்கள் பேசும்பொழுது, விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நடக்கும் பொழுது கள்ளக்குறிச்சி சோக சம்பவம் நடந்தது. ராமதாஸ், எடப்பாடி உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் பூதாகரமான பிரச்சினைகளை எழுப்பினர்கள். ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு மிக அதிகமான பிரச்சனை ஏற்படுத்தி இருந்த நிலையில், விக்கிரவாண்டி தேர்தலில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டுமே பிரச்சாரத்தில் மேற்கொண்டு வெற்றி பெறச் செய்தார். 2018 ஆம் ஆண்டு முதல் இயக்கத்திற்காக தீவிர பிரச்சாரம் செய்து நடைபெற்ற ஐந்து தேர்தல்களை வெற்றி பெற்ற செய்துள்ளார் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் . 75 ஆண்டுகளில் தொட்டுப் பார்க்க முடியாமல் வளர்ந்து, ஒரே சின்னத்தில் நிற்கும் கட்சி இந்தியாவிலேயே திமுக தான். அதிமுக இரட்டை இலை,சேவல், இரட்டைப் புறா, குக்கர், மீண்டும் இரட்டை இலை மாறி வந்த நிலை, அடுத்த மாதத்திற்கு இரட்டை இலை இருக்குமா இருக்காதா என்கின்ற சந்தேகம் இன்னும் இருக்கிறது.

நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 வெற்றியெனில் 222 தொகுதிகளில் திமுக வெற்றி பெறும் என தனியார் ஏஜென்சி தெளிவாக கணக்கெடுப்பு கொடுத்துள்ளது. 71% மக்கள் முதல்வர் மு .க. ஸ்டாலினுக்கு ஆதரவாக உள்ளார்கள். அயோத்தியில் எம்பி தேர்தலில் ஆதிதிராவிடரை நிற்க வைத்து பிஜேபியை தோற்கடித்த கூட்டணி இந்தியா கூட்டணி.

தாய்மார்களின் வாக்கை எந்த சக்தியாலும் திமுக விடமிருந்து பிரிக்க முடியாது. முன்பெல்லாம் பெண்கள் ஓட்டு போட்டால் இரட்டை இலைக்கு போகும் என்கின்ற நிலை மாறி, இன்று நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் நூற்றுக்கு 80 சதவீதம் பெண்கள் திமுகவுக்கு வாக்களித்துள்ளார்கள். திமுக ஆட்சியில் பாதுகாப்பு இருப்பது போல் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. அம்பேத்கர் பெயரில் சட்டக்கல்லூரி அமைத்தது திமுக ஆட்சியில் தான். அம்பேத்கரை பற்றி பேசினால் திமுகவுக்கு தான் கோபம் வரும். அமித்ஷா கூட்டத்துடன் அதிமுக மறைமுக கூட்டணியில் உள்ளது. அதனால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று பேசினார். வெற்றி வென்றே நமது குறிக்கோளாக வைத்து செயல்பட வேண்டும் என்று ஆர் எஸ் பாரதி உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் 1047 தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மிசா பா. மதிவாணன், டி. ராம கிருஷ்ணன், பா. அறிவழகி பாலகிருஷ்ணன், மஞ்சம்பா க்கம் ஆர். பாபு,பி. ஜெயராஜ், டி. வினோத், ஜி. ராஜ்குமார், எஸ். உதயகுமார், கே. சண்மு கப்ரியன்,எஸ். கோபாலகிரு ஷ்ணன், எஸ். சிவகுமார், துரை தசரதன், முகமது வசீம், பேன்சி ரமேஷ், சி. ஹரிஷ், எம். என். அஜய் தென்னவன், ஏ. ராஜே ந்திரன், பி.டி. ரவிச்சந்திரன் அ. பக்தவச்சலம், இ. எம். மனோகரன், க. கண்ணன், சு. மனோகரன், கு. செல்வன், எல்ல முத்து, டி .எஸ். ஜனார்த்தனன், பாஸ்கர், இ.அருள் இ. வெங்கடேசன், என் .பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ் குமார்,சி. முத்தையா, வி. மாரி சி . மூர்த்தி, சி. பாலாஜி, ரகுவரன். துளசி, கோவர்த்தனன், கதிரவன் ,

பாக முகவர்கள் பி. வாசு தேவன், டி. லாரன்ஸ். நாகையன். மஞ்சுளா. ஜெ. ராஜா, குழந்தைச்சாமி, டி. தங்கவேல். நடராஜன், இ. சரவணன், அருணாசலம். சேக் முகமது. ஜே .கே. ஹரி, ஆர். மோகன், உதயகுமார், வி .ஆர். கே. ஜவகர், வினோத், ஜி. அசோக், என். அசோக், ஜெயலிங்கம், சதீஷ்குமார் ,பாஸ்கர், எம். கலைச்செல்வி, எம். கீதா, ஆர். ஜெயபாரதி, ஜி. வயலட்ராணி, எம். தேவி, டீ. கல்பனா, லிங்கேஸ்வரி ,எஸ். கே ,ராஜேந்திரன், விமல், சுதர்சிங் ,எல். உலகநாதன், மகி, ஜி. வெங்கடேசன்,ஜி. சம்பத், பரணி, சோழன், உமா பாரதி, வடிவேல், ஜோதி, சங்கர், காஞ்சனா, ராஜேஸ்வரி, சகிலா,

சடைய குப்பம் நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், வக்கீல் எம். என். தளபதி, எலந்தனூர் சிவப்பிரகாஷ், விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார், வாட்ச் மதிவாணன், ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா, சிவப்பிரகாசம், எஸ். எஸ். கே. செல்வகுமார் ஜி. பூபாலன், எம். ஜான்சன் உள்ள உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இறுதியாக 23 அ வட்ட அவைத் தலைவர் ராமச்சந்திரன், 23 வட்ட அவைத் தலைவர் து. எழில் குமார் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

இராமாபுரம் செ.ரவி தலைமை! இராமாபுரம் வ.செல்வக்குமார் முன்னிலை! ரஞ்சினி ராஜேந்திரன் - க.ராஜ் - ராதா செல்வம் வரவேற்புரை!

# மதுரவாயல் தெற்கு பகுதி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் தெருமுனைக் கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி – அமைச்சர் மா.சுப்பிரமணியன் – காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச. 24 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, மதுரவாயல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் தெருமுனைக் கூட்டம் இன்று (24.12.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, இராமாபுரம் குறிஞ்சி நகர், அம்பேத்கர் சிலை அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு இராமாபுரம் செ.ரவி தலைமை வகிக்கிறார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், மாமன்ற உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார் முன்னிலை வகிக்கிறார்.

ரஞ்சினி ராஜேந்திரன், க.ராஜு, ராதா செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சூரிய வெற்றிக்கொண்டான், செ.தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் பி.டி. பாண்டிச்செல்வம், நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் துரை வீரமணி, எஸ். அருணாசலம், ச.சங்கர்கணேஷ், வி.ராஜேஷ், ஏ.விஜயபாலா, பி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜே. இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், எஸ்.இரமேஷ் ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ.மோசஸ், தி.சார்லஸ், மூன் லைட் டி.ரவி, செல்வி ரமேஷ், ஹேமலதா கணபதி, சாந்தி ராமலிங்கம், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நரேன் கணபதி, ஜிம் க.மூர்த்தி, ஆர்.தியாகராஜன், விஜய் டி.ராஜேஷ், இரா.பா.உதயகுமார், மதுரவாயில் வடக்கு பகுதி, வில்லி வாக்கம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இரா. வினோத், எம்.பி.நவராஜ், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் மா.ஜெகன், என். விவேக், என்.கிரி (எ) கணேசன், பா.தனசேகர், வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.ராஜேஷ், எஸ். சதீஷ்குமார், எஸ்.சேட்டு, ஆர். கார்த்திக் ராஜ், எஸ்.தினேஷ் எஸ்.எம்.அரவிந்த் பாலாஜி, எஸ்.அகமது பஷீர், டி.நரேஷ், பி.கே.எம்.அப்பு மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் எஸ். பி.தனவேல், ஏ.கோதண்டராமன், எஸ்.சூரியன், கே. சுப்பிரமணி, டி.வெங்கடேசன், கே.செந்தில்குமார், ஒய்.கே. மோகன்ராம், ஜி.இ.மகேஷ், எஸ்.முருகன், ஆர்.கருணாகரன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், அணிகளின் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், இந்நாள் - முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

செ.மோகன், பி.ஐய்யா, ப.அணிஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா புழல் காவாங்கரையில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, 1047 தாய்மார்களுக்கு சேலைகளை வழங்கினார். 23 அ வட்டச் செயலாளர் வி .ஆர். குப்பன், 23வது வட்டச் செயலாளர் பி.எஸ். சந்துரு வரவேற்றார்கள். இக்கூட்டத்தில் தலைமைக் கழக சொற்பொழிவாளர் ம.மோகநிதி, மிசா பா.மதிவாணன், டி. ராமகிருஷ்ணன், அறிவழகி பாலகிருஷ்ணன், வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். வட்ட அவைத் தலைவர்கள் அ. ராமச்சந்திரன் து. எழில்குமார் நன்றி கூறினார்கள்

கடலூர் கிழக்கு மாவட்டம்

## காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கடலூர் கிழக்கு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.இராமலிங்கம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, டி. ஜெயப்பாண்டியன் (பட்டிவாசல் தெரு, முட்டம் அஞ்சல், காட்டுமன்னார்கோவில் வட்டம், கடலூர் மாவட்டம்.) அவர்கள் காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.12.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

51வது நினைவு நாள்!

# தந்தை பெரியார் சிலைக்கு முதல்வர் மாலை அணிவிப்பு!

### சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கை!



சென்னை, டிச.24-

தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளில் சிம்சன் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினர் பங்கேற்க வேண்டும் என்று சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் 51-வது நினைவு நாளை முன்னிட்டு சிம்சன் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு இன்று (24.12.2024) காலை, மாலை அணிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்துகிறார்.

எனவே இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள் இந்நாள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி/ வட்டக்கழக செயலாளர்கள்- நிர்வா கிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, நெசவாளரணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, ஆட்டோ ஓட்டுனர் அணி, தொழிலாளர் அணி, மீனவர் அணி, மருத்துவ அணி , சுற்றுச்சூழல் அணி, ஆதி திராவிட நலக்குழு, சிறுபான்மையினர் அணி, வழக்கறிஞர் அணி,பொறியாளர் அணி அயலக அணி ஆகிய அணிகளின் மாவட்ட- பகுதி - வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு! இன்று (24-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!



### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 109அ | ச. டேவிட் இன்பராஜ் வட்டக் கழக செயலாளர் | ஸ்ரீராமபுரம் சந்திப்பு சூளைமேடு, சென்னை– 94 | சென்னை அரங்கநாதன் தலைமைக்கழக பேச்சாளர் கோகுல் தலைமைக் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 116அ | ஜெ.விஜய குமார் வட்டக் கழக செயலாளர் | பி.வி.நாயக்கன் தெரு, கெல்லட் பள்ளி அருகில் திருவல்லிக் கேணி, சென்னை– 5 | கந்திலி கரிகாலன் தலைமைக்கழக பேச்சாளர் எழும்பூர் கோபி தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்

### டிசம்பர் 24 (2008)



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் "மறுமலர்ச்சி படிப்பகம்" என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**